DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUVADANAI

| | | |
|---|---|---|
| Calendar | ... | |
| Miscellaneous | ... | |
| Preliminary Register | ... | Case No: C.C. No. 108/2022 |
| Session | ... | |
| | | Prosecution / PW–1 |
| Deposition of Witness for | ... | Defence / Court |

---

| | | |
|---|---|---|
| Name | : | திரு.சகுபர் சாதிக் |
| Father's Name (or) Husband Name | : | த/பெ.சீனி இப்ராஹிம்ஷா |
| Village | : | நம்புதாளை |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

(Accused absent U/s.317 Cr.P.C petition filed heard and allowed.).

Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 the day of 09.03.2023

---

**முதல் விசாரணை**

1. நான் நம்புதாளை கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் டீக்கடையில் வேலை செய்து வருகிறேன். எஸ்.பி.பட்டிணத்தில் இருக்கும்போது சூப் குடிக்க வருவதால் எதிரியை தெரியும்.

2. எதிரி எப்போதும் என்னிடம் சூப் இலவசமாக கேட்பார் நானும் கொடுத்துவிடுவேன், 17.08.2022 ம் தேதி இரவு 07.45 எஸ்.பி. பட்டிணம் ஆட்டோ ஸ்டேண்டு அருகே சூப் கடையில் நான் இருக்கும்போது எப்போதும் போல சூப் கேட்டாார். எலும்பு இல்லை என கூறி தகராறு செய்தார்

3. எதரி என்னை ஓத்தா, ஒம்மா என தகாத வார்த்தைகளால் திட்டி வெளியூர்காரன் இங்கு வந்து என்ன செய்கிறாய் என்று சொல்லி கட்டையை வைத்து தகரத்தை தட்டவும் அதிலிருந்த சூடான எண்ணெய் என் உடலின் வலது பக்கம் நெஞ்சு. கை, வலது தொடை ஆகியவற்றில் பட்டு எனக்கு தீக்காயங்கள் ஏற்பட்டது.

4. பின்னர் நான் எஸ்.பி. பட்டிணம் மருத்துவமனையயில் முதலுதலி சிகிச்சை பெற்றுவிட்டு பின்னர் இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் 15 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தேன். அதன்பிறகு வெளியில் சிகிச்சை எடுத்துக் கொண்டேன்

5. என்னிடம் காட்டப்படும் புகார்மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். புகார்மனுவை மருத்துவமனையில் வைத்து போலீசார் எழுதி என்னிடம் கையெழுத்து பெற்றார்கள். அதன் சங்கதிகளை நான் போலீசாரிடம் சொன்னேன் **(அந்த புகார்மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை அதனால் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.**